## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி- நெடுஞ்சாலைத் துறை - கருணையடிப்படைப் பணி நியமனம் - காலஞ்சென்ற இளநிலைப் பொறியாளர் திரு.பி.கே.முத்துசாமி என்பவரின் மகள் திருமதி.மு.ஜமுனா, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – விதிகளைத் தளர்த்தி பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை**

**அரசாணை (2ப) எண். 26** — **நாள்: 22.06.2023**

**சோபகிருது, ஆனி 7,**

**திருவள்ளுவர் ஆண்டு 2054.**

**படிக்கவும்:-**

1. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை கடித எண்.7718/நிர்.1(2)/2014, நாள் 15.03.2021, 07.02.2022 மற்றும் 06.02.2023.

---------

**ஆணை:-**

நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அவர்கள், நெடுஞ்சாலைத்துறையில் தருமபுரி (நெ) கோட்டத்தை சார்ந்த ஊத்தங்கரை நெடுஞ்சாலைத்துறை பிரிவு அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வந்த போது திரு.பி.கே.முத்துசாமி அவர்கள் 21.02.1993 அன்று பணியிடையே இயற்கை எய்தினார். அதனை தொடர்ந்து அவரது மகள் திருமதி.ஜமுனா அவர்கள் 28.04.2015 நாளிட்ட விண்ணப்பத்தில் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்ககோரி தனது தாயார் 17.02.1996 தேதியில் பதிவுத்தபால் மூலம் கண்காணிப்பு பொறியாளர் (நெ) தருமபுரிக்கு விண்ணப்பம் அளித்துள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து அதனை ஆய்வு செய்ததில், தலைமைப் பொறியாளர் (நெ), கிழக்கு கடற்கரை சாலை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண். 2127/அ1/96-1, நாள். 28.02.1996, கண்காணிப்புப்

பொறியாளர் (நெ), கிராமச் சாலைகள், சேலம் அவர்களின் க.எண்.சி.ஆர்.(10வ) 1227/96/அ1, நாள். 20.02.1996 மற்றும் கோட்டப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், கு.எண்.539/96/அ2 நாள். 20.02.1996ன் மூலம் திருமதி.எம்.ஜெயலட்சுமி அவர்கள் 17.02.1996 அன்று கருணை அடிப்படையில் தனது மகளுக்கு பணிநியமனம் வழங்க கோரி விண்ணப்பம் அளித்துள்ளது உறுதி செய்யப்பட்டது. அரசாணை (நிலை) எண். 155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 10.12.2014ல் 04.05.2010க்கு முன்னர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் நபர் பிற தகுதிகளை பூர்த்தி செய்து அவர் மைனராக இருக்கும் பட்சத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் பரிசீலனை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண். 78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 21.04.2017ல் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரும் நபர் திருமணம் ஆகியிருந்தாலும் அவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தனியருக்கு முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் 22.08.2019 நாளிடப்பட்ட செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் 05.09.2019மு.ப. அன்று கோட்டப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருப்பூர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்று மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2. எனவே, திருமதி.மு.ஜமுனா, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியை 05.09.2019மு.ப முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்திட ஏதுவாக தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ல், பிரிவுகள் 20(6) (b) மற்றும் பிரிவு 15 ஆகியவற்றை தளர்வு செய்து அரசாணையை பெற்றுத் தருமாறு முதன்மை இயக்குநர் (நெ) அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் (நெ) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அதன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி. மு.ஜமுனா என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.09.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தனியர்

திருமதி.மு.ஜமுனா விண்ணப்பம் அளித்த நாளில் 18 வயதினை பூர்த்தி செய்யாதது, பணிநியமனம் முன்னர் திருமணமான பெண் மற்றும் பணப்பலன் ஆகியவற்றிற்காக மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15, 20 (6) (b) மற்றும் பிரிவு 28(2)) ஆகியவற்றை தனியர் பொருட்டு தளர்த்தி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இந்த அரசாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.4487/க்யூ2/2023-1, நாள் 20.06.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25.

திருமதி. மு.ஜமுனா, இளநிலை உதவியாளர் (நெ).

(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை-25. வழியாக.)

மாநில கணக்காயர், சென்னை-600018.

<u>நகல்:-</u>

மாண்புமிகு அமைச்சர் அலுவலகம் (பொதுப்பணிகள்-கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள்), சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு) அவர்களின் அலுவலகம், சென்னை -9.

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலாளர், நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை-9.

அரசு துணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர், நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-9.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனிதவள மேலாண்மைத்துறை,சென்னை-9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

(கோ.எண்.4175/எச்.எம்.1/2021)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்